[6th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த விவரங்களெல்லாம் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, அன்னியர் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் அரிசனங்களுக்கு 'பஞ்சம தரிசு' என்ற பெயரில் கொடுக்கப்பட்ட நிலங்களைப் பொறுத்த வரையில் இன்றுவரைக்கும் பட்டா போட்டுக் கொடுத்து முடிந்ததாகத் தெரியவில்லை. ஒரு ஆட்சி போய் மறு ஆட்சி வந்தும்கூட, அந்த நிலங்கள் இன்னும் அரிசனங்களுக்குச் சரியாக வழங்கப்படவில்லை. பஞ்சாயத்து ஆட்சி வந்த பிறகு, அரிசனங்கள் இருக்கும் எந்த நிலமாக இருந்தாலும், அவர்களை வெளியேற்றுவது என்கிற நடவடிக்கை பொதுவாக இருந்துவருகிறது. ஆகவே, சர்க்கார் புது சட்டத்தை உருவாக்கியாவது அரிசனங்கள் உபயோகித்துக் கொண்டிருக்கும் நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் அன்னிய ஆட்சி முதற்கொண்டு சரித்திர பூர்வமான நிலைமையை எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி விவரமாகக் கூறினால் விடை அளிக்க முடியும்.

கம்போஸ்ட் உரம் விற்பனையில் நஷ்டம்

*165 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் கம்போஸ்ட் உரம் காலம் கடந்து விற்றதால் ரூ. 24,400 நஷ்டம் ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) There was a loss of about Rs. 23,700 in the sale of compost during 1962–63 in the Madhavaram Milk Colony. The loss was however not due to any delay in the sale of compost. It was due to the fact that there was no large demand for the compost at the price of Rs. 9 per ton fixed by the department. Therefore, 3,919 tons of compost was sold in auction on 6th April 1963, which realized only Rs. 7,660, resulting in the loss referred to above; and

(*b*) in order to create a better demand for compost, the selling price of compost made out of dung and waste matter in the Milk Colony has since been fixed at Rs. 6 per ton.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, ஒரு மாடு ஓராண்டில் எவ்வளவு எருவைக் கொடுக்க முடியும் என்கிற கணக்கு இருக்கிறது. அந்த வகையிலே அந்தப் பண்ணையிலே இருக்கும் மாடுகள் எத்தனை? அந்த மாடுகள்மூலம் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு எரு கிடைக்கவேண்டுமோ, அந்த அளவுக்கு எரு கொடுக்கின்றனவா?

6th March 1965]

கனம் திரு. வெ. ராமையா : பண்ணையிலே எரு கிடைக்கிறதைப் பொறுத்த வரையில் இதற்கென்று ஒன்றும் விசேஷக் கணக்கு போட வேண்டிய அவசியம் இல்லை. காரணம், அங்கே அதையெல்லாம் முறைப்படி சேமித்து வைக்கின்றார்கள். 'கம் போஸ்ட்' பண்ணியிருக்கிறார்கள். ஆரம்பத்திலே, ப்ராஜெக்டைச் சேர்ந்தவர்கள் டன் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் என்று வைத்தால் அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையாக இருக்கும் என்று நிர்ணயம் செய்திருந்தார்கள். அந்த விலை கொடுத்து விவசாயிகளால் வாங்க முடியவில்லை. அதனால் கால தாமதம் ஏற்பட்டது. அது மட்டுமல்ல. பிறகு, ஏலம் போடும் முறையை அனுஷ்டித்ததில், ஒன்பது ரூபாய் விலைக்குப் பதிலாக ஆறு ரூபாய்க்குத்தான் அது போயிருக்கிறது. அதனால் தான் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : ஆண்டொன்றுக்கு இந்த எரு விற்பனையின் மூலமாகக் கிடைக்கும் தொகை எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமையா : 1963-ம் வருஷத்தில் இதன் மூலமாகக் கிடைத்த தொகை ரூ. 7,660. அதற்கு அடுத்த வருஷம், அவர்கள் நிர்ணயம் செய்திருக்கக்கூடிய விலை அதிகமாக இருந்ததால், அதைக் குறைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

திரு. சா. கணேசன் : சாதாரணமாக முனிசிபாலிடிகளில் கிடைக்கின்ற கம்போஸ்ட் உரத்தைவிட இந்த உரம் மாட்டு மூத்திரம், சாணம் முதலியவை கலந்திருப்பதால் மிக்க வளமுள்ள உரமாக இருக்கிறது என்பதை உணர்ந்து, இதற்குத் தக்க பிரசாரத்தையோ அல்லது அறிவிப்புகளையோ செய்து, இதை உடனடியாக விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தால் இரு சார்புக்கும் பலனுள்ளதாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு செயல்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது மாதிரி, இது மிகவும் நல்ல உரம். இதற்கு வேண்டிய பிரசாரமெல்லாம் செய்திருக்கிறார்கள். ஆனால், ஒரு சிக்கல் இருக்கிறது. இதைத் தீர்த்துவிடுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இவர்கள் எவ்வளவு உரம் உற்பத்தி செய்கிறார்கள், அது எப்பொழுது கொடுக்க முடியும் என்பதைப் பற்றிய விவரம் தெரிந்து கொள்ளும் விஷயத்தில் விவசாய இலாகாவிற்கும் இவர்களுக்கும் ஒரு சம்பந்தம் இல்லாமல் இருந்தது. ஆனால், இந்த உரத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு கிடைக்கும், எப்பொழுது கிடைக்கும் என்ற விவரத்தையெல்லாம் விவசாய இலாகா டைரக்டருக்குத் தெரிவிக்கும்படியாகச் செய்து அவருக்கு எங்கெங்கே தேவைப்படுமோ, அங்கு அனுப்பும்படியாகவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால், இப்பொழுது மாநில ரீதியிலே இருக்கும் கம்போஸ்ட் டெவலப்மென்ட் ஆபீசர் இனிமேல் தொடர்ந்து இந்த உரத்தை யாருக்கு எப்படி விநியோகம் செய்யவேண்டுமோ, அந்த முயற்சியில் ஈடுபடுவார்.